சுருக்கம்

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை – சில தொகுப்பூதிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை – சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக – ஒப்பளிப்பு - செய்து – ஆணைகள் வெளியிடப்படுகிறது

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி–1) துறை**

அரசாணை (ப) எண். 246

நாள்: 19.02.2015
திருவள்ளுவர் ஆண்டு, 2046
ஜய மாசி – 07

படிக்கப்பட்டது:

(1) அரசு ஆணை (நிலை) எண்.385, நிதி (ஊதியப்பிரிவு) துறை, நாள்.01.10.2010.

(2) அரசு ஆணை (நிலை) எண்.680, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 28.06.2013.

(3) அரசு கடித எண்.23528/ஏபி.1/2013, சுகாதாரம், நாள் 13.09.2013.

(4) அரசு கடித எண்.8171/ஏபி.1/2014, சுகாதாரம், நாள் 09.07.2014.

(5) பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை கடித எண்.94556 / ஆசுநி–7 / 2012, நாள்.21.08.2014.

---

ஆணை:–

அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.1300–3000+ரூ.300/– தர ஊதியம் கொண்ட சிறப்பு காலமுறை ஊதியம் (Special Time Scale of Pay) நிர்ணயித்து, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2010 செப்டம்பர் 15–ம் நாள் முதல் நடைமுறைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டன. தினக்கூலி / தொகுப்பூதியம் அடிப்படையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையின்படி அவ்வகைப் பணியிடங்கள் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்வதற்கு உரிய கருத்துரு அரசுக்கு (நிருவாகத் துறைக்கு) துறைத் தலைவர்கள் அனுப்பி வைக்க வேண்டும் என்றும், அதனடிப்படையில், இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை மற்றும் மூன்று மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களின் வாயிலாக திருமதி ஆர். சரோஜா மற்றும் திருமதி கே. மலர்கொடி ஆகிய இரண்டு துப்புரவு பணியாளர்களும் தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் ஆரம்ப சுகாதார நிலையம், திருமதி எல்.ரமணியம்மாள், துப்புரவுப் பணியாளர், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் திருமதி சி. இராஜேஸ்வரி, துப்புரவு பணியாளர், தருமபுரி மாவட்டம், பெரும்பாளை ஆரம்ப சுகாதார நிலையம், ஆகியோர் சிறப்பு காலமுறை ஊதியத்திற்கு கொண்டுவரப்பட்டனர். சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் இத்துப்புரவுப் பணியாளர்களின் பொருட்டு அவர்கள் பணிபுரியும் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அரசிடம் வேண்டியுள்ளார்.

(த.பி.பா)

2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் ஆராய்ந்து சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றிவரும் கீழ்க்காணும் துப்புரவு பணியாளர்களின் பொருட்டு அவர்கள் பணிபுரியும் பணியிடங்களை அத்தனியர்கள் மூன்று ஆண்டுகள் பணிமுடித்த நாள் அல்லது 15.09.2010 இவற்றில் பிந்தைய நாள் முதல் சிறப்பு காலமுறை ஊதியம் (ரூ.1300+3000+ தர ஊதியம் 300) பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு வழங்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண் | பெயர் | பணிபுரியும் ஆரம்ப சுகாதார நிலையம் | பணியில் சேர்ந்த நாள் | பணியாளர்க்கு சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | ஆர்.சரோஜா | தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் ஆரம்ப சுகாதார நிலையம் | 9.9.2001 | 15.09.2010 |
| 2. | கே. மலர்கொடி | தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் ஆரம்ப சுகாதார நிலையம் | 3.9.2001 | 15.09.2010 |
| 3. | எல்.ரமணியம்மாள் | தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையம் | 31.08.2001 | 15.09.2010 |
| 4. | சி.இராஜேஸ்வரி | தருமபுரி மாவட்டம், பெரும்பாளை ஆரம்ப சுகாதார நிலையம் | 15.10.2007 | 14.07.2014 |

4. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.495FS/P/2015, நாள் 06.02.2015-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை- 600 006.
தனியர்கள், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை-600 006 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-18.
கருவூல கணக்கு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் தருமபுரி.

<u>நகல்</u>
சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் தருமபுரி.
நிதித் (ஊதியப் பிரிவு) துறை, சென்னை-9
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (Data Cell) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்